


சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம், திராவிட மாணவன் யூடியூப் சேனலில் "வருகிறார் உதயசூரியன்" என்ற சாதனை விளக்க பாடல் வெளியிட்டதையொட்டி தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர் புதுக்கோட்டை ரெ.மதியழகன் 06.11.2025 அன்று கேடயம் வழங்கி வாழ்த்துப் பெற்றார்.



திருச்சியில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு கழக முதன்மை செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் நீதிமன்றம் அருகில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். நிகழ்ச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், சேர்மன் துரைராஜ், டோல்கேட் சுப்பிரமணி, திருவரங்கம் ஆனந்து வழக்கறிஞர்கள் ஓம் பிரகாஷ், மோகன், அந்தோணி ராஜ், மணிவண்ண பாரதி, சித்ரா பாரி, பகுதிச் செயலாளர்கள் மோகன்தாஸ் இளங்கோ, கமால் முஸ்தபா மலைக்கோட்டை சதீஷ்குமார், முத்து பழனி, தனசேகர், தஸ்தா, கருத்து கதிரேசன் உட்பட திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## வடுகப்பட்டியில் ரூ.4.90 கோடியில் – சுதந்திரப் போராட்ட வீரர்

# பொல்லான் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – சு.முத்துசாமி – மா.மதிவேந்தன் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு!

ஈரோடு, நவ. 19 -

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரம், வடுகப்பட்டி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்களுக்கு ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் முழு திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டு வரும் பணியினை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்கள் ஈரோடு மாவட்டம், அரச்சலூர் அருகே உள்ள நல்லமங்காபாளையம் கிராமத்தில் பிறந்தவர். சிறு வயது முதலே மற்போர், வாள்வீச்சு மற்றும் வில் பயிற்சிகளில் சிறந்து விளங்கினார். இவரது வீரத்தையும் திறமையையும் கண்ட தீரன் சின்னமலை, இவரைத் தனது படையில் சேர்த்துக் கொண்டார். பொல்லான் தனது திறமையால்தீரன்சின்னமலையின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதியாகவும், மெய்க்காப்பாளராகவும் உயர்ந்தார். இவர் ஆங்கிலேய இராணுவத்திடம் இருந்து இரகசியங்களைத் திரட்டி சின்னமலையிடம் தெரிவிக்கும் ஒற்றர் படைப் பிரிவிலும் முக்கியப் பங்கு வகித்ததுடன் பல போர்களிலும் தீரன் சின்னமலையுடன் இணைந்து ஆங்கிலேயர்களுடன் போரிட்டு வெற்றி பெற்றார். மாவீரன் பொல்லான் அவர்கள் ஆங்கிலப் படைகள் தோல்விக்கு காரணமாக விளங்கியதால், பொல்லானை கைது செய்து ஓடாநிலைக் கோட்டை அருகே உள்ள ஜெயராமபுரத்தில் ஆங்கிலேயர்கள் படையினரால் சுட்டுக் கொள்ளப்பட்டு வீரமரணம் அடைந்தார்.

சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் வீரத்தினை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில் அன்னாருக்கு முழுதிருவுருச் சிலையுடன் கூடிய அரங்கமானது மொடக்குறிச்சி வட்டம், வடுகப்பட்டி, ஜெயராமபுரம் கிராமத்தில் 83 செண்ட் நிலப்பரப்பில் ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் முழு திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டு தற்போது பணிகள் முடிவு பெறும் நிலையில் உள்ளது. இந்த அரங்கமானது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.11.2025 அன்று திறந்து வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அரங்கம் 11,240 சதுர அடி கட்டிட பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. திருவுருவச்சிலை, அரங்கத்தின் முன்பகுதியில் நிறுவப்படவுள்ளது. மேலும், 300 நபர்கள் அமர்ந்து சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வகையிலும், 150 நபர்கள் உட்கார்ந்து உணவு அருந்தும் வகையிலும், மின்தூக்கி வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. வரவேற்பறை பகுதியில் சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்கள் போரில் பயன்படுத்திய கருவிகளை காட்சிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

தொடர்ந்து, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் ஆகியோர் அரச்சலூர், ஓடாநிலை தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்தில் சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் குதிரையின் மேல் அமர்ந்தபடி வெண்கலச்சிலை அமைக்கபடவுள்ள பணியினையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப. செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், பொதுப்பணித்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மணிவண்ணன், தலைமைப் பொறியாளர் ரங்கநாதன், கண்காணிப்பு பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, செயற்பொறியாளர் முருகேசன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டம், வால்பாறை சட்டமன்ற தொகுதி, வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சியில் 5.06 லட்சம் மதிப்பிலான CGF மின்கல வாகனத்தை தூய்மை பணியாளர்களுக்கு கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் வழங்கினார். இதில் வேட்டைக்காரன் புதூர் பேரூர் கழக செயலாளர் பார்த்திபன், பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி ரவிச்சந்திரன், பொறுப்புக்குழு முன்னாள் உறுப்பினர் ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நிஷாந்த் உள்பட வார்டு செயலாளர்கள், பேரூராட்சி கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், அரச்சலூர், ஓடாநிலையில் உள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் அமைந்துள்ள விடுதலை போராட்ட வீரர் மாவீரன் தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவச் சிலை அமைக்கும் பணியினை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார். உடன் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்து

# அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முனைவர் பட்டம் பெற்றார்!

## திருச்சி தேசியக் கல்லூரி வழங்கி பாராட்டு!

திருச்சி, நவ. 19 -

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது முனைவர் பட்ட ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்து, திருச்சி தேசியக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றதையடுத்து புறத்தேர்வு பேராசிரியரால் முனைவராக அறிவிக்கப்பட்டார்.



தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி பாரதிதாசன் பல்கலை.க்கு உட்பட்ட தேசியக்கல்லூரி விளையாட்டுத் துறையில் தனது முனைவர் பட்டத்துக்கான ஆராய்ச்சிக்கு பதிவு செய்து, அதற்கான முன்மொழிவை 2021 அக்டோபர் மாதம் சமர்ப்பித்தார்.

"பள்ளிக் குழந்தைகளின் உடல் திறன் செயல்பாட்டை இயந்திரக் கற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்டறிதல் எனும் தலைப்பில் முனைவர் பட்ட ஆராய்ச்சிக்கான தகவல்களை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சேகரித்து, ஆய்வுக் கட்டுரையை தயாரித்தார். முனைவர் பட்ட வழிகாட்டியாக கல்லூரியின் உடற்கல்வி துறை இயக்குநர் டி.பிரசன்ன பாலாஜி இருந்தார். இந்நிலையில், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக விதி முறைகளின்படி நேற்று முன்தினம் ஆய்வுக் கட்டுரைக்கான வாய்மொழித் தேர்வு தேசியக் கல்லூரியில் நடைபெற்றது.

இத்தேர்வுக்கு தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.திருமலைக் குமார் புறத்தேர்வராக இருந்தார்.

அமைச்சரின் ஆய்வுக் கட்டுரை தொடர்பாக உடற்கல்வித் துறை நிபுணர்கள், விளையாட்டுத் துறை ஆர்வலர்கள், பார்வையாளர்கள் தரப்பிலிருந்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதில் அளித்தார். இதையடுத்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழிக்கு முனைவர் பட்டத்தை உறுதிசெய்து புறத்தேர்வு பேராசிரியர் சான்றிதழ் வழங்கினார்.

## ரூ.89.16 லட்சத்தில் 8 சாலை பணிகள் – 1518 மீட்டர் நீளத்திற்கு

# அம்மாப்பேட்டை மண்டலத்தில் தார்ச்சாலை அமைக்கும் பணி!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், நவ. 19 -

சேலம் மாநகராட்சி அம்மாப்பேட்டை மண்டலத்தில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 8 சாலை பணிகள் ரூ.89.16 இலட்சம் மதிப்பீட்டில் 1518 மீ நீளத்திற்கு தார்ச்சாலை அமைப்பதற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், நேற்று முன்தினம் (17.11.2025) அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

அம்மாப்பேட்டை மண்டலத்தில் 2025-2026 ஆண்டிற்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கிருஷ்ணா புதூரில் 230 மீ நீளத்திற்கு ரூ.14.14 இலட்சம் மதிப்பீட்டிலும், எஸ்.கே. டவுன் ஷிப் 1வது குறுக்கு தெரு ரோடு 350 மீ நீளத்திற்கு ரூ.30.02 இலட்சம் மதிப்பீட்டிலும், எஸ்.கே. டவுன் ஷிப் 2வது குறுக்கு தெரு ரோடு ரூ.30.02 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மேகலா நகர் 1வது தெருவில் 78 மீ நீளத்திற்கு ரூ.2.32 இலட்சம் மதிப்பீட்டிலும், மேகலா நகர் 1வது குறுக்கு தெரு 30 மீ நீளத்திற்கு ரூ.0.76 இலட்சம் மதிப்பீட்டிலும், பாலமுருகன் தெரு நம்பர் 2, 170 மீ நீளத்திற்கு ரூ.4.21 இலட்சம் மதிப்பீட்டிலும், பாலமுருகன் தெற்கு குறுக்குத் தெருவில் 100 மீ நீளத்திற்கு ரூ.2.48 இலட்சம் மதிப்பீட்டிலும், பாலமுருகன் 1வது தெருவில் 210 மீ நீளத்திற்கு ரூ.5.21 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 8 பணிகள் ரூ.89.16 மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், தொடங்கி வைத்தார்.

இப்பணிகள் அனைத்தும் தரமானதாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள் விரைவாகவும் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆ.இராமச்சந்திரன், ஆணையாளர் டாக்டர். மா.இளங்கோவன், மண்டலக்குழுத்தலைவர் .கே. டி.ஆர்.தனசேகர், மாமன்ற உறுப்பினர்கள் மா.திருஞானம், திருமதி.மா.பச்சியம்மாள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க மருத்துவரணி மற்றும் ஒரத்தநாடு தெற்கு ஒன்றிய கழகம் தி.மு.க. இணைந்து ஆம்பலாப்பட்டு வடக்கு மாரியம்மன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமை கழக மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். நிகழ்வில் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.இராமச்சந்திரன், து.செல்வம், பொதுக்குழு உறுப்பினர் திராவிட கதிரவன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், தஞ்சை மத்திய மாவட்ட மருத்துவர் அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் பங்கேற்றனர்.



மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மன்னார்குடி நகரம், மத்திய ஒன்றியம், மேற்கு ஒன்றியம்,கோட்டூர் தெற்கு, வடக்கு ஒன்றியங்களின் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கான பயிற்சி வகுப்பில், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கேசவன், எஸ்.ஐ.ஆர். படிவம் குறித்த விளக்கங்களை எடுத்துரைத்தார்.தேர்தல் பொறுப்பாளர் ராஜா.சீனிவாசன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையமங்கலம் ஜி.பாலு, மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் அழகுத்திருராஜா, அவைத் தலைவர்கள் க.தன்ராஜ் , த.முருகையன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி சிவா, வீ.எஸ்.ஆர். தேவதாஸ், பாலா. ஞானவேல், நகர செயலாளர் வீரா.கணேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர் மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், பொதுக்குழு உறுப்பினர் ராஜபூபாலன், கலைவாணி மோகன், காஞ்சித்துரை, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி பா.அரவிந்த் மற்றும் கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து கொண்டனர்.